# மணவாளமாமுனிகள் வைபவம்
## (ஸ்ரீ.உ.வே.வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி)

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பல ஆசார்யர்கள் விளங்கினாலும் மூவர் முக்யமாகக் கொள்ளப்பட்டுள்ளார்கள். அவர்கள் நம்மாழ்வாரும், நம்மிராமானுசனும், நம்மணவாளமாமுனிகளும் ஆவர். ''ஆழ்வார் திருவடிகளே ஶரணம். எம்பெருமானார் திருவடிகளே ஶரணம். ஜீயர் திருவடிகளே ஶரணம்'' என்று ஸ்ரீவைஷ்ணவவுலகம் இவர்களை நிச்சலும் அநுஸந்தாநம் செய்துவருகிறது. இவர்களுள், நம்மாழ்வாருடைய பெருமையிற்காட்டிலும், ஸ்ரீராமாநுசருடைய பெருமைமிக்கது. இவ்விருவர் பெருமையினும் மணவாள மாமுனிகளின் மேன்மை மிக்கது. ஒப்புயர்வற்றது என்றபடி. ஆசார்ய பதவியை அலங்கரிப்பதற்கு ஏற்ற நற்குணங்கள் அனைத்தும் மாமுனிகள் திறத்தே குடிகொண்டிருந்தன என்றால் இஃது இறையும் அதிஶயோக்தியாகாது. இவர் திருவவதரித்தது ஆழ்வார் திருநகரியில். இவரது திருத்தந்தையாரின் திருநாமம் திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாஸர் அண்ணர். கலியுகாதி நாலாயிரத்து நானூற்று எழுபத்திரண்டாவதான ஸாதாரண வருடத்தில் ஐப்பசித் திங்களில், திருமூல நன்னாளில் ஆதிஶேஷனுடைய அம்ஶமாகவும், ஸ்ரீராமாநுஜருடைய அபராவதாரமாகவும் தோன்றினார். இங்ஙனே உலகுக்கெல்லாம் ஓர் உயிராகத் தோன்றிய திவ்யமூர்த்திக்கு ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமத்தைச் சாத்த விரும்பிய பெரியோர் அழகியமணவாளன் எனப் பெயரிட்டனர். '''அழகிய மணவாள நாயனார்'' எனச் சிறப்புத் திருநாமமாக வழங்கிவந்தது.

ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய பரம்பரையில் பிள்ளைலோகாசார்யர் என்பவர் ஓர் மஹாசார்யர். இவர் ரஹஸ்யார்த்தங்களைப் பதினெட்டு நூல்கள் மூலமாய் வெளியிட்டருளிய பெருவள்ளல். அவருடைய திருவடிகளிலும் அவருடைய சீடரான கூரகுலோத்தம தாஸர் திருவடிகளிலும் சிரகாலம் பணிந்திருந்து அரியபெரிய அர்த்த விஶேஷங்களை நன்கு உணர்ந்தவரும் ஆழ்வார்களின் ஈரச்சொற்களிலே ஈடுபாடு காரணமாக ''திருவாய்மொழிப்பிள்ளை'' என்று சிறப்புத் திருநாமம் பெற்றவருமான ''திருமலையாழ்வார்'' (ஸ்ரீஶைலேஶர்) என்கிற ஆசாரியரை அடிபணிந்து ஸத்ஸம்ப்ரதாய அர்த்தங்களைப் பெற்றார் நம் மாமுனிகள். நம் பூர்வாசார்யர்கள் அனைவரும் திருவரங்கம் பெரிய கோயிலிலே எழுந்தருளியிருந்து தர்ஶந நிர்வாஹம் செய்துவந்தனராதலால் மாமுனிகளும் திருவரங்கம் திருப்பதியிலே வந்து சேர்ந்து அங்கு ஸ்ரீரங்கநாதனாலும் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களாலும் பஹுமாநிக்கப்பெற்று, ஶிஷ்யர்களுக்கு ஸம்ப்ரதாய அர்த்தங்களை அருளிச் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார். இல்லற வாழ்க்கையைத் துறந்து துறவறம் பூண்டு ''மணவாளமாமுனிகள்'' என்கிற திருநாமத்துடன் விளங்காநின்றார். வானமாமலையிலே மஹாஜ்ஞாந நிதியாக எழுந்தருளியிருந்த ''அழகியவரதர்''

என்பவர் பரமவிரக்தியாலே துறவறம் பூண்டு ''ஸ்ரீராமாநுஜஜீயர்'' என்று திருநாமம் பெற்றிருந்தார். அவரே மாமுனிகளின் தலைவரான ஶிஷ்யர். மாமுனிகளின் ஶிஷ்யர்களில் எண்மர் தலைமை பெற்று அஷ்டதிக்கஜங்கள் என்கிற சிறப்புப்பெயரும் பெற்று உலகம் போற்ற நின்றார்கள். அவர்களது திருநாமங்கள் 1. வானமாமலை ஜீயர், 2.பட்டர்பிரான் ஜீயர், 3. திருவேங்கட ராமாநுஜ ஜீயர், 4.கோயிலண்ணன், 5.ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, 6.எறும்பியப்பா, 7. அப்பிள்ளை, 8. அப்புள்ளார். இவர்கள் தவிர நவரத்நங்க ளான ஶிஷ்யர்களும் உண்டு. ஸேனை முதலியாண்டான் நாயனார், சடகோப தாஸரான நாலூர்சிற்றுத்தான், கந்தாடை போரேற்றுநாயன், ஏட்டூர் சிங்கராசார்யர், கந்தாடை அண்ணப்பன், கந்தாடை திருக்கோபுரத்து நாயனார், கந்தாடை நாரணப்பை, கந்தாடை தோழப்பரப்பை, கந்தாடை அழைத்து வாழ்வித்த பெருமாள் ஆகிய இவர்கள் நவரத்னங்கள். மாமுனிகளின் பூர்வாஶ்ரமத் திருக்குமாரர் ராமாநுஜாசார்யர். திருப்பேரர் ஜீயர் நாயனார் என்று ப்ரஸித்தரான அழகிய மணவாள நாயனார்.

கோயில் கந்தாடையண்ணன் (உடையவருக்கு முதலியாண்டானைப் போலே) இவருக்குப் பாதுகாஸ்தாநீயரா யிருப்பர். எறும்பியிலப்பா (வடுகநம்பி யைப் போலே) தேவுமற்றறியாத அத்யந்தாபிமதராயிருப்பர், ப்ரதிவாதி பயங்கரமண்ணா (ஆழ்வானைப்போலே) உசாத்துணையாயிருப்பார். அப்பிள்ளார் (உறங்காவில்லிபோலே) மடத்தில் ஸர்வபரங்களையும் நடத்திக்கொண்டு போருவர். வானமாமலைஜீயர் (அருளாளப் பெருமாள் எம்பெருமானார்போலே) ஆஶ்ரயித்தவன்று தொடங்கிப் பிரியாதாட் செய்திருப்பர். பட்டர்பிரான்ஜீயர் பூர்வாஶ்ரமத்திலே கோவிந்ததாஸரப்ப னென்று திருநாமத்தையுடையராய் முப்பது வருஷம் பிரியாதே இருந்து மஹாவிரக்தராய் ஜீயரான பின்பும் பிரியில் தரியாமை முன்னிட்டு அடிமை செய்கை யாலே எம்பாரைப்போலே பாதச்சாயாபந்ந ராயிருப்பர். ஜீயர்நாயனார் திருக்குருகைப் பிரான்பிள்ளானைப்போலே அத்யாதரணீய ராயிருப்பர்.

**ஸ்ரீமாந் ஸுந்த$_3$ரஜாமாத்ருமுநி:**
**பர்யாய ப$_4$ாஷ்யக்ருத்**
**ப$_4$ாஷ்யம் வ்யாகுர்வதஸ் தஸ்ய**
**ஶ்ரோத்ருகோடௌ மமாந்வய:॥**

என்கிறபடியே எம்பெருமானாருடைய புநரவதாரமான பெரியஜீயர் பூப்ரதக்ஷி ணம் பண்ணி அநேக ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரணம் பண்ணியருளினார். திருநகரியில் திருவாய்மொழிப்பிள்ளைக் குத் தம்முடைய நிஜஸ்வரூபமான ஶேஷாவதாரத்தைக் காட்டினார். பரமத நிரஸந பூர்வக ஸ்வமத ஸ்தாபநம் பண்ணினார்.

மாமுனிகளுக்கு அமைந்துள்ள பெருமைகளில் தலையான பெருமை ஸ்ரீரங்கநாதனுக்கும் காலக்ஷேபம் ஸாதித்த பெருமை. அப்பெருமான் மாமுனிகளிடத்தே திருவாய்மொழிப் பொருள்கேட்க விரும்பி, ஒரு நாள் இவருக்கு அருளப்பாடு இட்டு, "ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரிய

திருமண்டபத்திலே இருந்து நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாருயிரப்படி முதலான வ்யாக்யாநங்களுடனே ப்ரவசனம் செய்வீர்'' என்று நியமிக்க, மாமுனிகளும் அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவோடுங் கூடப் பேரோலோக்கமாக எழுந்தருளியிருந்து ஈடு தொடக்கமான ஐந்து வ்யாக்யாநங்களுடனே திருவாய்மொழியை அவ்வவ்விடங்களிலே, ''இது ஶ்ருதி ப்ரக்ரியை. இது ஸ்ரீபாஷ்ய ப்ரக்ரியை. இது ஶ்ருதப்ரகாஶிகா ப்ரக்ரியை. இது கீதாபாஷ்ய ப்ரக்ரியை. இது ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரக்ரியை. இது ஸ்ரீராமாயண ப்ரக்ரியை. இது மஹாபாரத ப்ரக்ரியை. இது விஷ்ணு புராண ப்ரக்ரியை. இது மஹாபாகவத ப்ரக்ரியை. இது பதார்த்தம். இது வாக்யார்த்தம். இது மஹாவாக்யார்த்தம். இது வ்யங்க்யார்த்தம் என்று அற்புதமாய், ''விஶதவாக்ஶிகாமணி'' என்கிற தமது விருது நிறம்பெறவும், ''ஸர்வஜ்ஞஸார்வபௌமர்'' என்கிற பட்டம் பொலியவும் ப்ரவசனம் செய்துவந்தார். பெருமாளும் நாச்சிமாருடனே சீரிய சிங்காசனத்து எழுந்தருளியிருந்து ஒரு ஸம்வத்ஸரம் அளவும் திருச்செவி சாத்தியருளினர். காலக்ஷேபம் முடிவுபெறும் நாளில், அப்பெருமான் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனாகக் கோலம் பூண்டு, கோஷ்டியின் இடையே வந்து, கைகூப்பி நின்று, ''ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம்'' என்று தொடங்கி முப்பத்திரண்டு எழுத்துத் திருமந்த்ரமாகிய தனியனை விண்ணப்பம் செய்து மறைந்தான். இவ்வதிஶயத்தை நோக்கி அனைவரும் வியந்தனர். இத்தனியனைப் பட்டோலைகொண்டு மஞ்சள் காப்பு சாத்தி ஸ்ரீரங்கநாதன் திருவடிவாரத்தில் ஸமர்ப்பித்து எடுத்து தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ''வடமொழி வேதத்திற்கு ஓங்காரம்போலே தென்மொழி வேதத்திற்கு இத்தனியனே முதலும் முடிவுமாகக் கடவது'' என்று பெருமாளுடைய நியமநமும் பாங்காக வாய்த்தது.

பிள்ளை உலகாரியர் அருளிச்செய்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஸ்ரீவசந பூஷணம், தத்த்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யங்களுக்கும் மாமுனிகள் அத்யாஶ்சர்யமான வ்யாக்யாநம் இட்டருளினர். பிள்ளைலோகாசார்யர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் அருளிச் செய்த ''ஆசார்யஹ்ருதயம்'' என்னும் ரஹஸ்ய ரத்நத்திற்கும் மாமுனிகள் – தேனும் பாலும் கன்னலும் அமுதுமாய வ்யாக்யாநம் இட்டு அருளினர். பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளையிடம் தமக்குள்ள ப்ரதிபத்தி தோற்றும்படியாக நாலாயிர திவ்யப்ரபந்தங்களில் அவருடைய உரை கிடைக்கத்தக்கதாயிருந்த எந்த ப்ரபந்தத்திற்கும் தாம் உரையிடாமல், பெரியாழ்வார் திருமொழியில் அவருடைய வ்யாக்யாநம் லோபமடைந்த பகுதிக்கு மாத்திரமும், அவரால் உரையிடப்படாத இராமாநுச நூற்றந்தாதிக்கும் உரையிட்டு அருளினர். திருவாய்மொழி நூற்றந்தாதி, உபதேச ரத்தினமாலை, ஆர்த்திப்பிரபந்தம், யதிராஜ விம்ஶதி, தேவராஜமங்களம், என்கிற பத்ய

நூல்களையும் அருளிச்செய்தார். நம்மாழ்வார் தம்முடைய பெருமையை ''துவளில் மாமணிமாடம்'' என்கிற திருவாய்மொழியில் தாமே வெளியிட்டுக் கொண்டாப் போலே, மாமுனிகளும் தாமே தம்முடைய பெருமைகளை ஆர்த்திப்பிரபந்தத்தில்

**தென்னரங்கர் சீரருளுக்கிலக்**
**காகப் பெற்றோம்**
**திருவரங்கம் திருப்பதியே**
**யிருப்பாகப் பெற்றோம்**
**மன்னியசீர் மாறன்கலை**
**யுணவாகப் பெற்றோம்**
**மதுரகவி சொற்படியே**
**நிலையாகப் பெற்றோம்**
**முன்னவராம் நங்குரவர்**
**மொழிகளுள்ளப் பெற்றோம்**
**முழுது நமக்கவை பொழுது**
**போக்காகப் பெற்றோம்**
**பின்னையொன்று தனில்**
**நெஞ்சு பேராமற் பெற்றோம்**
**பிறர்மினுக்கம் பொருமையிலாப்**
**பெருமையும் பெற்றோமே**

என்று வெளியிட்டருளுகிறார். இப்பாசுரமே நமக்கு நித்யாநுஸந்தேயம்.

**அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ**
**சடகோபன் தண்தமிழ் நூல் வாழ –**
**கடல் சூழ்ந்த**
**மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே**
**இன்னுமொரு நூற்றாண்டிரும்.**